[1972 ஆகஸ்ட் 23

குளிர்சாதனப் பெட்டிகள் தயாரிப்பு

*** 286 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் குளிர் சாதனப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவிட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே. தனியார்த் துறையைச் சார்ந்தவர்கள் யாரேனும் குளிர் சாதனப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவிட முன் வந்து, அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே சென்னையில் இரண்டு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவதாக ஒரு நிறுவனம் நிறுவிட மனு போட்டிருக்கிறார்கள். அந்த மனு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினாக்கள் 287, 288, 289 ஒத்திவைக்கப்படுகின்றன.

காரணிக்கு விவசாயத் துணைக் கிடங்கு

*** 290 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், காரணி கிராமத்தில் விவசாயத் துணைக் கிடங்கு நிலையம் (**Agriculturalsub-depot** திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, இந்தக் காரணி கிராமத்தில்—அந்த வட்டாரத்தில்—உள்ள விவசாயிகள் உரங்கள், விதைகள் வாங்குவதற்காக இரண்டு பஸ்களைப்